[2002 ஏப்ரல் 4

வேண்டியுள்ளது; மிகவும் பிற்படுத்தப்பட்டோர்கள், ஆதிதிராவிட மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். வறுமைக் கோட்டிற்குக்கீழ் அதிகமாக இருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், இந்த ஆண்டு உதவி வழங்கி, இதற்கு விதிவிலக்கு அளித்து, புதிய மின் விளக்கு வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற உக்கரம் ஊராட்சியில் 221 டியூப் லைட்டுகளும், 15 சோடியம் ஆவி விளக்குகளும் ஏற்கெனவே இருக்கின்றன. அந்த ஊராட்சியினுடைய நிதி நிலைமையைப் பொறுத்து, அந்த ஊராட்சி மன்றத் தலைவர் விரும்பினால், ஊராட்சியின் தீர்மானத்தின் மூலமாக, ஊராட்சி நிதியின் மூலமாகக் கூடுதலாக விளக்குகள் அமைத்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாகவும் அந்த ஊராட்சிப் பகுதியிலே கூடுதலாக, புதியதாக மின் விளக்குகள் அமைத்துக் கொள்ளலாம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அந்த ஊராட்சிக்கு அவருடைய நிதியிலேயிருந்துகூடப் புதிய மின் விளக்குகள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 88, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

88—

விவசாயக் கல்லூரி

***4986—திரு. எம். ராம்குமார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, பாபநாசம் நகரத்தின் பக்கத்தில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2002 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எம். ராம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை, நாகை, திருவாரூரை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் என்பது காவிரி டெல்டா மாவட்டங்களாகும். முழுவதும் விவசாயத்தினைச் சார்ந்திருக்கின்ற அந்தப் பகுதிக்கு விவசாயக் கல்லூரி தேவை என்பது அந்தப் பகுதி விவசாயிகளினுடைய நீண்ட நாள் கோரிக்கை ஆகும். பாபநாசம் தொகுதியைப் பொறுத்தவரை, மிக அதிகமான அளவிலே விவசாயத்தை, விவசாயிகளைச் சார்ந்திருக்கின்ற ஒரு தொகுதியாக இருக்கிறது. தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களைப் பொறுத்தவரை, இந்த அமைச்சரவையிலே நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சரை அந்தப் பகுதிக்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தந்து இருக்கிறார்கள். மண்ணின் மைந்தராக இருக்கின்ற வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், அந்த மாவட்டங்களினுடைய நீண்ட நாள் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து, எவ்வாறு தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பெயருக்கு உலகப் புகழைச் சேர்க்கின்றதோ அதேபோல மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெருமையை இந்த உலகிற்கும், தமிழகத்திற்கும் அறிவிக்கும் வண்ணம், ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில், என்னுடைய பாபநாசம் தொகுதியில் அந்த மேற்படி வேளாண்மைக் கல்லூரி அமைப்பது குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே தஞ்சை நஞ்சையும், புஞ்சையும் கொண்டு பூத்துக் குலுங்கியது. ஆனால் தஞ்சையிலே பாய்கிற காவிரி வறண்ட நிலையிலே இன்றைக்கு இருக்கிறது. அதை வைத்து எல்லாம் கேட்க முடியாது. ஆனால் இன்றைக்கு உள்ள சூழ்நிலையிலே, தமிழகத்தைப் பொறுத்த அளவில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பிலே 10 கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. கோவை, மதுரை, கிள்ளிகுளம் மற்றும் திருச்சி; வேளாண்மைப் பொறியியல் கல்லூரி - கோவை மற்றும் குமுளூர், தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் - கோவை மற்றும் பெரியகுளம், வன இயல் கல்லூரி

மற்றும் ஆராய்ச்சி நிலையம் - மேட்டுப்பாளையம், மனை இயல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் - மதுரை, இப்படி 10 இடங்களில் கல்லூரிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

முற்பகல் 10-50

கிட்டத்தட்ட, ஒரு ஆண்டுக்கு 531 மாணவர்கள் பயின்று வெளியே வருகிறார்கள். ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து மாணவர்கள் படித்து வெளிவரவேண்டுமென்று சொன்னால், ஒரு மாணவருக்கு ஒரு இலட்சத்து இருபத்தேழாயிரம் ரூபாய் செலவாகிறது. அது மட்டுமல்ல; புதிதாக ஒரு கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்று சொன்னால், 500 ஏக்கர் நிலமும், கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் பணமும் தேவைப்படுகிறது. ஆகவே, இருக்கிற நிதிநிலையையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டு நம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப்பற்றி இந்த அரசு சிந்திக்கும் என்று பணிவோடு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, சிவபுண்ணியம், இல்லை. உங்கள் கேள்விக்குப் பதில், 'இல்லை.'

திரு. வை. சிவபுண்ணியம்: நீங்களே சொல்லிவிட்டீர்களே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பழைய வேளாண்மைத் துறை அமைச்சர்.

வினா எண் 89, திரு. கே.என். இலட்சுமணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

89—

கம்பளிப் புழுத் தாக்குதலைத் தடுத்தல்

***9727—திரு. கே.என். இலட்சுமணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பளிப் புழு தாக்கி, நிலக்கடலை நாசமாவதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?